**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.200/2019 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | மனோஜ்குமார் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 26.06.2023**

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 16 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 29.02.2012 தேதியிட்ட ஷீலாசுமதி பெயரில் பத்ராஜ் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.1.
2. 03.06.2016 தேதியிட்ட வாதிகள் பெயரில் அயிட்டம் எண்.1 குறித்து பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.2.
3. 05.11.1993 தேதியிட்ட சதானந்தன் பெயரில் உள்ள கிரய பத்திரம் வா.சா.ஆ.3.
4. 06.05.1996 தேதியிட்ட பத்ராஜ் பெயரில் வழங்கப்பட்ட பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ.4.
5. 05.04.2016 தேதியிட்ட அயிட்டம் எண்.2 குறித்து வாதிகள் பெயரில் உள்ள கிரய பத்திரம் வா.சா.ஆ.5.
6. 02.07.2018 தேதியிட்ட சோழிங்கநல்லூர் தாசில்தார் வழங்கிய உத்தரவு வா.சா.ஆ.6.
7. வாதிகள் பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.7.

8. F.M. வரைபட நகல் வா.சா.ஆ.8.

9. மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.9.

10. வழக்குச் சொத்தின் வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ.10.

11. 31.08.2017 தேதியிட்ட சோழிங்கநல்லூர் பேரூராட்சி வழங்கிய குடிநீர் இணைப்பு கடிதம் மற்றும் வரைபடம் வா.சா.ஆ.11.

12. குடிநீர் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.12.

13. 12.03.2018 தேதியிட்ட சென்னை மண்டல செயற்பொறியாளர் வழங்கிய கடிதம் வா.சா.ஆ.13.

14. 05.11.1993 தேதியிட்ட சுதர்சன் என்பவர் பெயரில் உள்ள கிரய பத்திரம் வா.சா.ஆ.14.

15. 31.07.2018 தேதியிட்ட சிட்டா வா.சா.ஆ.15.

16. 31.07.2018 தேதியிட்ட அடங்கல் வா.சா.ஆ.16.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)